செ. கு. எண்: 142 நாள்:31.10.2019

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – 31.10.2019

**விருதுநகர் மாவட்டம்,** இராஜபாளையம் வட்டத்தில் உள்ள சாஸ்தாகோவில் நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், சாஸ்தாகோவில் நீர்த்தேக்கத்திலிருந்து **1.11.2019 முதல் 18.12.2019** வரை 48 நாட்களுக்கு பாசனத்திற்காக தண்ணீரை திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், விருதுநகர் மாவட்டத்தில் (கண்மாய் பாசனம் மூலம் 2679.10 ஏக்கர் நிலங்கள் மற்றும் நேரடிப்பாசனம் மூலம் 451.58 ஏக்கர் நிலங்கள்) மொத்தம் **3130.68 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9